[திரு. வி. சோமசுந்தரம்] [2003 மார்ச் 31

ஏற்கெனவே தொழில் மந்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறி நெசவுத் தொழில்மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரியினால், விசைத்தறி நெசவாளர்கள் கலால் வரிக்கும் அதன் நடைமுறைகளுக்கும் உட்பட்டு பாதிக்கப்படும் சூழ்நிலை எழுந்துள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த விருப்ப வரி முறையினையே தொடர்ந்து விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், இயலாதபட்சத்தில் சிறு தொழில்களுக்கு வழங்கியதைப் போன்று ரூ.1 கோடிக்குக் குறைவாக வியாபாரம் மேற்கொள்ளும் விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு கலால் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனவும், மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களை 28-3-2003 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் வகையிலே தாயுள்ளத்தோடு சென்ற நிதியாண்டில் விசைத்தறிகளுக்கு உயர்த்தி நிர்ணயித்த மின் கட்டண உயர்வைத் திரும்பப் பெற்றார்கள். மீண்டும் தற்போதைய மின் கட்டணத்திலே விசைத்தறி நெசவாளர்கள் நலன் பாதிக்கப்படாமல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பி.எம். நரசிம்மன். *(குறுக்கீடுகள்)*

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: Point of order. அதாவது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும்போது இப்படி 110-ன்கீழ் அறிக்கை போடுவது சரியல்ல, இதை நான் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் அறிக்கை எப்போது வேண்டுமானாலும் போடலாம். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மதிப்புக் கூட்டு வரியை எதிர்த்து வியாபாரிகள் கடை அடைப்புப் போராட்டம் நடத்துவது குறித்து நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் முடிந்ததற்குப் பிறகு ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம். திரு. பி. எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த, நான் நித்தம் நித்தம் வணங்குகிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்குவதற்காக பல்வேறு நலத் திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அனைத்துத் துறைகளையும் முதன்மை இடமாக்குவதற்காக பல்வேறு அரிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாயமான, நம்பிக்கையான, நலம் பயக்கத்தக்க அறிக்கை இந்த நிதிநிலை அறிக்கையாகும். இருட்டிலே இருந்த தமிழகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிற தூண்டுகோலாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கிற 19 மாவட்டங்களிலே சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, ரூபாய் 4,334.11 கோடி அளவிலே